# கூட்டு வணிக மெட்ரோ / பயண அட்டை - விண்ணப்பம்

## (குறைந்த பட்ச விவரங்கள் உள்ள தனி நபர்களுக்கு மட்டுமே)

(பயணசீட்டு இயந்திரம் / மெட்ரோ கௌண்டர்களில் பயன்படுத்த மட்டுமே)

| முழுப்பெயர் | | F | I | R | S | T | | | M | I | D | D | L | E | | | L | A | S | T | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பாலினம் | | | | | | | | | | | | | | | | | | | | | |
| பிறந்த தேதி | | | | | | | | | | | | | | | | | | | | | |
| கைபேசி எண்* | | | | | | | | | | | | | | | | | | | | | |
| ஓவிடி (OVD) எண்*$ | | | | | | | | | | | | | | | | | | | | | |
| ஓவிடி (OVD) வகை* | | | | | | | | | | | | | | | | | | | | | |
| நிரந்தர கணக்கு(PAN) எண் | | | | | | | | | | | | | | | | | | | | | |
| MCRN எண்# | | | | | | | | | | | | | | | | | | | | | |

*அவசியம் பூர்த்திச்செய்ய வேண்டியவை

$ தயவுசெய்து பின்வரும் ஏதாவது ஒரு அதிகாரப்பூர்வமாக செல்லுபடியாகும் ஆவணத்தின் எண் மற்றும் வகையை குறிப்பிடவும் (A முதல் F வரை): A – கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்) எண், B - வாக்காளர் அட்டை எண், C- ஓட்டுநர் உரிம அட்டை எண், D - NREGA வேலை அட்டை, E - மின் கடிதம், F - தேசிய மக்கள் தொகை பதிவாளர் வழங்கப்பட்ட பெயர், விலாசம் விவரங்கள் அடங்கிய ஆதார் அட்டை எண் அல்லது ஒழுங்குப்படுத்தும் அதிகாரி மூலமாக இந்திய அரசால் வெளியிடப்பட்ட ஆணை.

**உறுதிமொழி:**

- கூட்டு வணிக மெட்ரோ / பயண அட்டை வேண்டி நான் கொடுத்துள்ள விண்ணப்பத்தில் உள்ள விவரங்கள் அனைத்தும் உண்மை மற்றும் சரியானது என்றும் விண்ணப்பத்தில் உள்ள விவரங்கள் அனைத்தும் என்னுடைய சுயநினைவுடன் குறிப்பிட்டுள்ளேன் என்பதை உறுதியளிக்கிறேன்.
- எந்தவொரு காரணமும் கூறாமல் இந்த விண்ணப்பத்தை ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ எஸ்பிஐக்கு உரிமை உண்டு என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.
- எனது தனிப்பட்ட KYC விவரங்கள் மத்திய KYC பதிவகம் அல்லது வேறு ஏதேனும் தகுதி வாய்ந்த நிறுவனத்துடன் பகிரப்படலாம் என்பதை ஒப்புக்கொள்கிறேன். வங்கி / மத்திய KYC பதிவேடு / GoI / RBI அல்லது எனது பதிவு செய்யப்பட்ட மொபைல் எண் / மின்னஞ்சல் முகவரியில் குறுஞ்செய்தி (SMS) / மின்னஞ்சல் மூலம் தகவல்களைப் பெற நான் இதன் மூலம் ஒப்புக்கொள்கிறேன். அத்தகைய குறுஞ்செய்தி (SMS) / மின்னஞ்சல் எதுவும் பெறபடாவிட்டால், ஏற்படும் இழப்பு அல்லது சேதங்களுக்கு வங்கி பொறுப்பேற்காது என்பதையும் ஒப்புக்கொள்கிறேன்.
- சென்னை மெட்ரோ கூட்டு வணிக / டிரான்சிட் அட்டைக்கு பொருந்தும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை (இணைக்கப்பட்டுள்ள) படித்துள்ளேன். அவ்வப்போது நடைமுறையில் இருக்கும் இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்குக் கட்டுபடுவதாகப் நான் ஒப்புக்கொள்கிறேன்.

**தானாகவே மதிப்பு கூட்டுதல்:**
குறைந்தபட்ச இருப்புத் தொகையானது நிர்ணயிக்கப்பட்ட வரம்பான ரூபாய் 2000/-க்குக் குறைவாக இருந்தால், அட்டையில் உள்ள எனது சில்லறை இருப்புத் தொகையில் (ஹோஸ்ட் பேலன்ஸ்) இருந்து தானாகவே பயண அட்டை (குளோபல்) இருப்பு தொகைக்கு மாற்றி வரவு வைப்பதற்கு பாரத ஸ்டேட் வங்கிக்கு இதன் மூலம் அங்கீகரிக்கிறேன்., இது சென்னை மெட்ரோ / பாரத ஸ்டேட் வங்கி ஆகியோரால் வரையறுக்கப் பட்டபடி அவ்வப்போது மாற்றப்படலாம்.
**குறிப்பு:** குறைந்த பட்சம் ரூபாய் 100/- மற்றும் ரூபாய் 100/- மடங்குகளில் அட்டையின் மதிப்பு கூட்டப்பட வேண்டும்.

**தேதி: ___/___/_____**

**இடம்:_____________**

**கூட்டு வணிக மெட்ரோ / பயண அட்டையை பெற்றுக்கொண்டேன்**

**விண்ணப்பதாரரின் கையொப்பம்**

**விண்ணப்பதாரரின் கையொப்பம்**

**பயணச்சீட்டு அலுவலக பயன்பாட்டிற்கு மட்டுமே**

குறியீடு & பெயர்: ____________________________

அட்டை எண்.: ___________________________________

விண்ணப்பதாரருக்கு மேற்கண்ட அட்டை வழங்கப்பட்டது.

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் பெயர் மற்றும் கையொப்பம்.

விண்ணப்பத் தொடர். எண்.:

தேதி

**கூட்டு வணிக மெட்ரோ / பயண அட்டையின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்**

இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அனைத்து சென்னை மெட்ரோ கூட்டு வணிக / பயண கார்டுதாரர்களுக்கும் பொருந்தும். இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அவ்வப்போது வங்கியால் நிர்ணயிக்கப்பட்ட பிற விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுடன் கூடுதலாக இருக்கும்.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவன (CMRL) கூட்டு வணிக / பயண அட்டை பற்றி:

சென்னை மெட்ரோ (CMRL) கூட்டு வணிக / பயண அட்டை என்பது தொடுதல் இல்லா இரட்டை இன்டர்ஃபேஸ் (EMV சிப் அடிப்படையிலான) ப்ரீபெய்ட் அட்டை ஆகும், இது பாதுகாப்பான, மற்றும் தவிர எளிய முறையில் கட்டணம் செலுத்த கூடிய பன்முக போக்குவரத்து கட்டண முறைகளை கொண்டுள்ளது, இந்த அட்டை சில்லறை கட்டணங்கள் மற்றும் மின்வணிகத்திற்கும் பயன்படுகின்றது, பல்வேறு போக்குவரத்து பயன்பாடுகளுக்கான தொகையைப் பிரித்தல், மற்றவற்றிற்கு இடையே போக்குவரத்து போன்ற பல்வேறு பயன்பாடுகளுக்கான தொகையை பகுதியாக்கம் செய்து வைப்பது இந்த அட்டையின் தனித்துவமான அம்சமாகும், இது பயணத்தின் போது அட்டையில் சேமிக்கப்பட்ட தொகையில் இருந்து ஆஃப்லைனில் பயணசீட்டுக்களை வாங்குவதற்கு பயன்படுத்திக்கொள்ளலாம், அட்டையின் சேமிக்கப்பட்ட மதிப்பிலிருந்து, இந்த சேமிக்கப்பட்ட தொகை பயண (குளோபல்) இருப்பு என அறியப்படுகிறது.

பொருட்கள் மற்றும் பயண டிக்கெட்டுகளை வாங்குதல், பயணவிடுதி / உணவகங்களில் பில்களை செலுத்துதல், மற்ற பயன்பாட்டிற்கான பில்களை செலுத்துதல் போன்ற பல்வேறு நோக்கங்களுக்காக ஆன்லைன் இருப்புத்தொகையைப் பயன்படுத்த வசதியானது, இவ்வாறானது சில்லறை (ஹோஸ்ட்) இருப்பு என அறியப்படுகிறது), இந்த அட்டை அனைத்து பாரத ஸ்டேட் வங்கி ஏடிஎம்களிலும் பணம் எடுக்கலாம், மற்ற வங்கி ஏடிஎம்களில் பணம் எடுப்பதை தவிர்த்து பிற பரிவர்த்தனைகளை வங்கி செய்ய முடியும், அதற்கு கட்டணம் செலுத்த வேண்டும். பணம் எடுப்பதை தவிர்த்து, மற்ற அனைத்து பரிவர்த்தனைகளையும் தொடுதல் அல்லது தொடுதல் இல்லா முறைகளிலும் செய்யலாம்.

முக்கியமான வழிகாட்டுதல்கள்:

**1.** கூட்டு வணிக மெட்ரோ / பயண அட்டையை, பயண மற்றும் சில்லறை விற்பனை / பிஓஎஸ் / மின்வணிகம் ஆகியவற்றிற்குப் பயன்படுத்தலாம். போக்குவரத்து, பிஓஎஸ் சாதனம் அல்லது ஆன்லைனில் ஏதேனும் முறையில் அட்டையை பயன்படுத்தி, பணம் எடுதல் / வாங்குதல் போன்றவற்றிற்கு உண்டான சேவைக் கட்டணங்கள் மற்றும் பிற கூடுதல் கட்டணங்கள் ஆகியவற்றிற்கு அட்டையில் உள்ள தொகையில் இருந்து கழிக்கப்படும். பெட்ரோல் பம்புகள், ஹோட்டல்கள் மற்றும் உணவகங்கள் போன்ற இடங்களில் அட்டையை பயன்படுத்தினால், சில வணிக நிறுவனங்கள் பிற சேவைக் கட்டணம் விதிக்கலாம்.

**2.** அட்டை வைத்திருப்பவர், அட்டை கிடைத்தவுடன் அட்டையின் பின்புறத்தில் உள்ள கையொப்பப் பலகத்தில் கையொப்பமிட்டு, அட்டை பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

**3.** குறைந்தபட்ச விவரங்கள் கொண்ட கூட்டு வணிக மெட்ரோ / பயண அட்டை வழங்கப்பட்ட நாளிலிருந்து 24 மாதங்களுக்கு செல்லுபடியாகும். அட்டையை முழு KYC க்கு மேம்படுத்தப்படாவிட்டால், வழங்கப்பட்ட 24 மாதங்களுக்குப் பிறகு டாப்அப் அனுமதிக்கப்படாது. தொடர்ந்து ஒரு வருடத்திற்கு நிதி பரிவர்த்தனை இல்லாத அட்டைகள் செயலற்றதாக்கப்படும்.

**4.** உங்கள் அட்டையை முழு KYC அட்டையாக மாற்ற குறிப்பிட்ட பாரத ஸ்டேட் வங்கி கிளைக்கு சென்று அந்தந்த தருணத்தில் RBI ஆல் பரிந்துரைக்கப்பட்ட ஆவணங்களை சமர்பித்து மாற்றிக்கொள்ளலாம்.

**5.** இந்தியாவில் குடியில்லாத இந்தியர்களுக்கு (NRI) அட்டை வழங்கப்பட்டிருந்தால், அப்போதைய வங்கியின் வழிகாட்டுதல்கள் பின்பற்றப்படும்.

**6.** மெட்ரோ அட்டையை பயன்படுத்தி அட்டையில் ஏற்கனவே ஏற்றப்பட்டுள்ள சில்லறை (ஹோஸ்ட்) இருப்பு தொகையில் இருந்து பணம் எடுப்பதற்கும் அல்லது சில்லறை வணிகம் செய்வதற்கும், ATM இல் பணம் எடுப்பதற்கும் தேவையான தொகையை அட்டையில் வைத்திருப்பது அட்டைதாரரின் பொறுப்பாகும். மேலும் அட்டையில் உள்ள பயண (குளோபல்) இருப்பில் போக்குவரத்திற்கு தேவையான தொகையை வைத்திருப்பதும் அட்டைதாரரின் பொறுப்பாகும்.

**7.** பயண (குளோபல்) இருப்பில் பணம் வரம்பு மதிப்பிற்குக் கீழே சென்றால், மதிப்பு கூட்டுதல் தானாகவே நடைபெறும். மதிப்பு கூட்டுதல் தானாக நடைபெற சில்லறை (ஹோஸ்ட்) இருப்பில் இருந்து பயண (குளோபல்) இருப்பிற்கு பணம் தானாகவே பற்று வைக்கப்படும். வாடிக்கையாளரின் நலன் கருதி, பயண (குளோபல்) இருப்பு உச்சப்பட்ச வரம்பாக நிர்ணயக்கப்பட்டுள்ளது.

**8.** அட்டையை மாற்ற வேண்டும் என்றால், அன்றைய தேதியில் நடைமுறையில் உள்ள, போக்குவரத்து நிறுவனம் / எஸ்பிஐ ஆல் தேவைக்கு ஏற்ப மாற்றப்படும் கட்டணத்தை அட்டைதாரர் செலுத்த வேண்டும்.

**9.** குறிப்பிட்ட பாரத ஸ்டேட் வங்கி கிளையில் பணமாகவோ அல்லது வங்கி பரிமாற்றம் மூலமாகவோ உங்கள் அட்டையின் மதிப்பினை கூட்டலாம் அல்லது பணமாக / கிரெடிட் கார்ட் / டெபிட் கார்டு மூலம் பயணச்சீட்டு வழங்கும் கவுண்டரில் அட்டையின் மதிப்பினை கூட்டலாம்.

**10.** வங்கி, அதன் விதிமுறைகளுக்கு ஏற்ப, அட்டைகளை நிர்வகிக்கும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை எப்பொழுது வேண்டுமானாலும் திருத்தலாம். அத்தகைய மாற்றங்களுக்கான அறிவிப்பு வங்கியின் இணையதளத்திலோ அல்லது வங்கியால் வேறு ஏதேனும் முறையிலோ வெளியிடப்படும், அவை அட்டை வைத்திருப்பவரை கட்டுப்படுத்தும்.

**11.** அட்டையை பயன்படுத்துவதற்கான கட்டணம் (ஏதேனும் இருந்தால்) செலுத்தியிருப்பின் எந்தச் சூழ்நிலையிலும் திருப்பி வழங்கப்படாது.

**12.** பணம் திரும்ப பெறும் கோரிக்கை எழுத்துப்பூர்வ விண்ணப்பத்தின் மூலம் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். அப்பொழுது மொபைல் எண் சரிபார்ப்பு மற்றும் OVD சரிபார்ப்பு (அட்டை கொடுக்கப்பட்ட நேரத்தில் வழங்கப்பட்டவை) கட்டாயமாகும்.

**13.** சில்லறை (ஹோஸ்ட்) இருப்பு மற்றும் பயண (குளோபல்) இருப்புத் தொகையைத் திரும்பப் பெறுவது, எஸ்பிஐ யின் நியமிக்கப்பட்ட கிளையால் T + 7 வேலை நாட்களில் செயலாக்கப்படும். அட்டை இழப்பை புகார் தெரிவிக்கும் போது அல்லது அட்டையை ஒப்படைக்கும் போதும் பதிவு செய்யப்படாத ஆஃப்லைன் பரிவர்த்தனைகளுக்காக அட்டை கணக்கிலிருந்து பணம் பிடித்தம் செய்யும் உரிமையை வங்கிக்கு உள்ளது.

**14.** அட்டைதாரரின் மரணம், திவால் மற்றும் நொடித்து போதலின் பொழுது அல்லது அட்டைதாரரிடமிருந்து கடிதம் பெறப்பட்டால், தகுதிவாய்ந்த நீதிமன்றத்திலிருந்து பற்றுகைக் கட்டளை பெறப்பட்டால் அல்லது வேறு ஏதேனும் சரியான காரணங்களினால் அல்லது அட்டைதாரரால் கூறப்படும் வேறு காரணங்களினால், அட்டைதாரரின் இருப்பிடம் பற்றி வங்கிக்கு தெரியாமல் போனால், எந்த அறிவிப்புமில்லாமல் அட்டையின் பயன்பாடு நிறுத்தப்படும்.

**15.** எந்தவொரு காரணத்திற்காகவும், வாடிக்கையாளர் பணம் எடுக்க முடியாமல் போனாலோ அல்லது அதில் கொடுக்கப்பட்டுள்ள எந்தவொரு வசதியை பயன்படுத்த முடியாமல் போனாலோ, பணம் வழங்க முடியாத நிலையிலுள்ள எந்தவொரு ஏடிஎம்*-ன் செயல்படாத் தன்மைக்கு வங்கி பொறுப்பேற்காது.

**16.** எந்தவொரு வணிக நிறுவனம் (ME), அட்டையை ஏற்கவோ மதிக்கவோ இல்லை என்றால் அதற்கு வங்கி பொறுப்பேற்காது. மேலும், அட்டைதாரருக்கு வழங்கப்பட்ட சரக்குகள் மற்றும் சேவைகள் தொடர்பான எந்த செயல்பாட்டுக்கும் வங்கி பொறுப்பேற்காது. சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் நேரடியாகவே அனைத்து கோரிக்கைகள் அல்லது சர்ச்சைகளை அட்டைதாரர் கையாளவேண்டும். வணிக நிறுவனத்திற்கு (ME) எதிராக அட்டைதாரர் வைக்கும் எந்தவொரு கோரிக்கையும் வங்கியை எந்தவிதத்திலும் கட்டுப்படுத்தாது. வணிக நிறுவனத்திடமிருந்து அல்லது பணம் பெற்றவரிடமிருந்து வங்கிக்கு பணம் வந்தால் மட்டுமே அட்டையில் வரவு வைக்கப்படும்.

**17.** வணிக நிறுவனம் (ME) அசல் பட்டியல்களை அட்டைதாரருக்கு வழங்குவதற்கு வங்கி பொறுப்பாகாது.

**18.** அட்டைதாரர் பரிவர்த்தனை ரசீதுக்கான அட்டைதாரரின் நகலை வணிக நிறுவனம் (ME) யிடமிருந்து சேகரித்து, அதை அவரது தனிப்பட்ட பதிவுக்காகப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

**19.** வங்கி அதன் விருப்பப்படி எந்த அட்டை பரிவர்த்தனையையும் அங்கீகரிக்கும் அல்லது நிராகரிக்கும்.

**20.** ஏடிஎம் அல்லது பிஓஎஸ் முனையத்திலோ அல்லது ஆன்லைன் பயன்பாட்டின் மூலமோ, அட்டையை பயன்படுத்தி செய்யப்படும் பரிவர்த்தனைகள் வாடிக்கையாளரை கட்டுப்படுத்தும்.

**21.** தனது அட்டை மூலம் வழங்கப்பட்ட எந்தவொரு உத்தரவையும் அட்டைதாரர் எதிர்க்க முடியாது.

**22.** பணம் செலுத்தும் முறையின் தொழில்நுட்ப முறிவினால் ஏற்படும் எந்த இழப்புக்கும் வங்கி பொறுப்பேற்காது.

**23.** அட்டையின் பயன்பாட்டின்பொழுது, அட்டைதாரர் இறக்க நேர்ந்தால், அந்தக் கணக்கின் செயல்பாடுகளை வங்கி நிறுத்தி விடும். இறந்த நபர்களின் சொத்துக்களுக்கான ஏற்பாடுகள் குறித்த விதிகளின்படி அட்டைக் கணக்கிலுள்ள இருப்புத்தொகை சரி செய்யப்படும்.

**24.** அட்டை கணக்கிலுள்ள பயன்படுத்தப்படாத இருப்புத்தொகைகளின் மீது எந்த வட்டியும் வழங்கப்பட மாட்டாது.

**25.** அட்டை வைத்திருப்பவர் அட்டையை யாரிடமும் ஒப்படைக்கக் கூடாது, அட்டையைப் பெற்றவுடன் அட்டையின் பின்புறத்தில் உள்ள கையொப்பப் பலகத்தில் கையொப்பமிட வேண்டும், யாருக்கும் பின் (PIN) நம்பரை ஐ வெளியிடக்கூடாது மற்றும் அட்டையில் பின் (PIN) நம்பரை ஐ எழுதக்கூடாது.

**26.** தொலைந்து போன / திருடப்பட்ட அட்டைகளை பற்றி புகார் அளிக்கலாம்.

- **A.** வேலை நேரத்தில் நியமிக்கப்பட்ட எஸ்பிஐ கிளைகள் அல்லது மெட்ரோ ரயில் நிலையத்தில் உள்ள பயனச்சீட்டு வழங்கும் அலுவலகதில் எழுத்துப்பூர்வமாக புகாரளிக்க வேண்டும்.
- **B.** வாடிக்கையாளர். மையத்தில் புகார் அளிக்கலாம்.
- **C.** வாடிக்கையாளர் போர்டலில் புகார் சமர்பிக்கலாம்.

**27.** உங்கள் அட்டையை பற்றிய விவரங்களை சந்தேகத்திற்குரிய நபர்கள் விசாரித்தாலோ அல்லது அட்டை தொலைந்தாலோ அல்லது திருடப்படாலோ உடனடியாக வாடிக்கையாளர் சேவை மையத்தை தொடர்பு கொள்ளவும் அல்லது எஸ்பிஐ வங்கியின் 24 x 7 உதவி எண்ணிற்கு (ஹெல்ப்லைன்) 1800 1234 (கட்டணமில்லா) தொடர்பு கொள்ளவும், இதனால் அட்டை உடனடியாக முடக்கப்படும் மற்றும் தொலைந்து விட்ட அட்டை தவறாக பயன்படுத்தப்படுவதிலிருந்து தடுக்கப்படும்.

**28**. சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் கூட்டு வணிக / பயண அட்டை இந்தியாவில் செய்யப்படும் பரிவர்த்தனைகளுக்கு மட்டுமே செல்லுபடியாகும்

# முக்கியமானது

- **I.** அட்டையை மாற்ற கட்டணம் ரூ.100/- (ரூபாய் நூறு மட்டும்)
- **II.** அட்டை சிப்பில் (CHIP) அதிகபட்ச இருப்பு தொகை ரூபாய் 2000 ஆக இருக்கும், இது போக்குவரத்து சூழலில் பயன்படும்.
- **III.** குறைந்தபட்ச தொகை ரூபாய் 100 மற்றும் அதற்குப் பிறகு ரூபாய் 100-ன் மடங்குகள்.
- **IV.** சம்பந்தப்பட்ட அனைத்து சேவைகளும் - பிஓஎஸ் பரிவர்த்தனைகள், இணையவழி மற்றும் ஏடிஎம் மூலம் பணம் எடுப்பது தொடர்பான அனைத்து சேவைகளும் பின்னர் செயல்படுத்தப்படும்.

*முழு KYC கார்டுகளுக்கு மட்டுமே பொருந்தும்
#இயக்கப்படும் போது

தேதி: ____/____/_______

இடம்:________________

விண்ணப்பதாரரின் கையொப்பம்